III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S..34/2014

Deposition of witness for the Plaintiff/DW2
Respondent solemnly by Tmt. R.Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 24-09-2021

Name :Dinakar Caste :
Father's/Husband's Name:Govindasamy Calling :
Age :
Religion:
Village : Taluk:

**முதல் விசாரணை தொடர்ச்சி -**

05.07.1980 தேதியிட்ட அசல் கூட்டு நிறுவன ஒப்பந்த ஆவணம் பி.சா.ஆ.46 ஆகும். விஸ்வ ஜோதி பிரிக் இண்டஸ்டிரிஸ் நிறுவனத்தின் வருமான வரி கணக்கு பட்டியல் பி.சா.ஆ.47 ஆகும். என்னுடைய தந்தை திரு. கோவிந்தசுவாமி தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்த வருமான வரி கணக்கு பட்டியல் பி.சா.ஆ.48 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய தந்தை எந்த வருடம் சென்னை ஜெனாய் நகரில் அலுவலகம் தொடங்கினார் என்று தெரியாது. அந்த அலுவலகம் என் தந்தை உயிருடன் இருந்த வரை செயல்பாட்டில் இருந்தது. தோராயமாக 2007 முதல் 2009 வரை அலுவலகம் இருந்தது. என் தந்தையின் அலுவலகம் லட்சுமி டாக்கீஸ் ரோடு, ஜெனாய் நகர் என்ற விலாசத்தில் இருந்தது. தாவா எப் செடியூல் சொத்து ஜெனாய் நகர் சொத்தில் ஒரு பகுதி என்றால் சரிதான். நான் 04.05.1986 தேதியில் பிறந்தேன். பி.சா.ஆ.46 நான் பிறப்பதற்கு முன்பு ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.48 ஆவணம் 03.03.1986 தேதியிட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.47 ஆவணம் 24.07.1986 தேதியிட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ.46 முதல் 48 வரையான ஆவணங்களில் நான் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான்.

மேற்சொன்ன ஆவணங்களில் நான் சாட்சியும் கிடையாது என்றால் சரிதான். எனவே பி.சா.ஆ.46 முதல் 48 வரையான ஆவணங்கள் குறித்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பி.சா.ஆ.47 மற்றும் 48 ஆகிய வருமான வரி கணக்கீட்டு பட்டியல்களில் ரங்கசாமி அண்டு கோ நிறுவனத்தின் முத்திரை மற்றும் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன கணக்கீட்டு பட்டியல்கள் தான் வருமான வரித்துறையில் தாக்கல் செய்யப்பட்டது என்பதற்காக வருமான வரித்துறையின் முத்திரைகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆனால் வருமான வரி தாக்கல் செய்தது குறித்து ஒப்புகை சீட்டு வழங்கியிருக்கிறார். பி.சா.ஆ.47 மற்றும் 48 ஆகிய ஆவணங்களின் என் தந்தையின் விலாசம் எண்.290, பூந்தமல்லி நெடுஞ்சாலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.48 ஆவணத்தில் வருமான வரித்துறை வழங்கிய ஒப்புகை ரசீதில் விஸ்வஜோதி பிரிக் இண்டஸ்டிரிஸ் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எண.290, பூந்தமல்லி நெடுஞ்சாலை என்ற விலாசத்தில் விஸ்வஜோதி பிரிக் ஓர்க்ஸ் அலுவலகம் இயங்கி வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 ஆவணத்தின் படி 01.04.1979 முதல் எண்.290, பூந்தமல்லி நெடுஞ்சாலை என்ற விலாசத்தில் விஸ்வஜோதி பிரிக் ஓர்க்ஸ் அலுவலகம் இயங்கி வந்தது என்றால் சரிதான். குடும்ப உறுப்பினர்களின் வருமான வரி தாக்கல் விவரங்களை பி.சா.ஆ.37 முதல் 44 வரை ஏற்கெனவே தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். விஸ்வஜோதி பிரிக் ஓர்க்ஸ் நிர்வாகத்திற்காக என்னுடைய தந்தை குடும்ப உறுப்பினர்களிடம் பொது அதிகார ஆவணம் வாங்கியிருந்ததாக சொன்னால் அது தவறாகும். அவ்வாறு பொது அதிகார ஆவணத்தை நானே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே பி.சா.ஆ.46 முதல் 48 வரையான ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.